**SAVINGS**

# AIA SMARTBUILDER



aialife.com.lk

HEALTHIER, LONGER, BETTER LIVES

வேகமாக நகரும் இந்த உலகில் உங்களுக்கான பொறுப்புக்கள் அதிகம், சில சமயங்களில் நாம் எமது இலக்குகள் மற்றும் கனவுகளை அடைவதில் உள்ள கவனத்தை சிதறிவிடலாம். நிகழ்காலத்தில் எமக்குள்ள பொறுப்புக்கள் காரணமாக எதிர்காலத்திற்கு பாதுகாப்பான நிதிவளம் ஒன்றை உருவாக்கவும் தவறிவிடலாம். உங்களின் எதிர்காலம் பாதுகாப்பானது என்ற நம்பிக்கையுடன் கடைசியாக நீங்கள் எப்பொழுது புன்னகை செய்தீர்கள்?

AIA SmartBuilder உடன் அதனை நீங்கள் சாத்தியமாக்கலாம், AIA SmartBuilder மிகவும் சிறப்பான நிதிவளத் தீர்வாகும். அது உங்களினதும் உங்கள் அன்பிற்குரியவர்களினதும் நிதிப் பாதுகாப்பினை நீங்கள் அருகில் இல்லாவிட்டாலும் உறுதி செய்யும் தீர்வுத் திட்டமாகும். அதற்காக நீங்கள் செய்ய வேண்டியது, உங்கள் கட்டுப்பணத்தினை 04 அல்லது 06 ஆண்டுகளுக்குச் செலுத்துவதாகும்.

## இது உங்களுக்கு மிகப் பொருத்தமான திட்டமா?

- இதுவரை நிறைவேறாத எதிர்பார்ப்புக்கள் நீங்கள் கொண்டுள்ளீர்களா
- நீண்டகால வெகுமதியினை வழங்கும் குறுகியகால முதலீட்டில் ஆர்வமாக உள்ளீர்களா?
- நீங்கள் இல்லாத சந்தர்ப்பத்திலும் கூட உங்களது குடும்பத்தினர் மாதாந்த வருவாய் ஒன்றை பெற வேண்டும் என்று எண்ணுகின்றீர்களா?
- நீங்கள் இல்லாவிட்டாலும் உங்கள் குடும்பத்தின் வாழ்க்கை தரத்தினை பாதுகாக்க விரும்புகின்றீர்களா?

## AIA SmartSaver மூலம் உங்களுக்குளன்ன வழங்குகின்றது?

### மிகவும் குறுகிய கட்டுப்பணம் செலுத்தும் காலஎல்லை

நீங்கள் 04 தொடக்கம் 06 வருடங்கள் மாத்திரமே கட்டுப்பணம் செலுத்த வேண்டும் எனபதுடன், நீங்கள் விரும்பிய காலம் வரை பாதுகாப்பை பெற்றுக் கொள்ளலாம்.

### முதிர்வின் போது ஒரேதடவையில் அல்லது சிறு பகுதியாக மீளப்பெறும் தெரிவு

உங்கள் காப்பீடு முதிர்வடையும் போது அதனை ஒரே தடையில் மொத்தமாக அல்லது 10 தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான மாதாந்த வருமானமாக மீளப் பெற்றுக் கொள்ளவதை தெரிவு செய்யலாம்.

### அவசரத் தேவைக்கு பணத்தை மீளப்பெறும் வசதி

காப்புறுதிக் காலத்தினுள் ஒரு தடவை காப்புறுதி கட்டுப்பணம் செலுத்தும் காலத்தினை பூர்த்தி செய்த பின்னர், அவசரத் தேவைக்காக நிதியத்திலிருந்து 15% வரையான தொகையினை மீளப்பெறும் வாய்ப்புள்ளது.



## உங்களுக்கு பொருத்தமான ஆயுள் காப்பறுதி.

AIA SmartPay உங்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கக் கூடிய, ஆயுள் காப்புறுதியை வழங்குகிறது.

## எதிர்பாராத சம்பவம் நிகழுமானால்?

எதிர்பாராத வகையில் உங்களது மரணம் ஏற்படுமானால், உங்களில் தங்கியிருப்போர் உடனடி ஆயுள் அனுகூலத்தை பெறுவார்கள் (விபத்து மூலம் மரணம் சம்பவித்தால் விபத்து மரணக் காப்புறுதி பெறப்பட்டு இருப்பின், அத்தொகை இருமடங்காகும்) மேலும் முதிர்வின் போது முழுத்தொகை அல்லது மாதாந்த வருவாயை பெறுவார்கள். (காப்புறுதிக் கட்டுப்பணத்தைச் செலுத்தும் காலப்பகுதியில் மரணம் நிகழுமாயின், உடனடி ஆயுள் அனுகூலக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக) உங்கள் சார்பில் AIA கட்டுப்பணம் செலுத்துவதை தொடர்வதுடன் நீங்கள் திட்டமிட்ட சகல அனுகூலங்களையும் உங்களின் பின்னுரித்தாளர்கள் பெறுவது உறுதி செய்யப்படும்.

## பங்குலாபத்துடன்கூடிய AIA Smartbuilder

பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாப வீதம் (கட்டணங்கள் கழிக்கப்பட்ட) அல்லது வருடாந்த உத்தரவாதப்படுத்தப்பட்ட மீள் கொடுப்பனவு வீதம் (கட்டணங்கள் கழிக்கப்பட்ட) என்பவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் தொடரச்சியான வளர்ச்சியை நிச்சயிக்கும் ஒப்பற்ற பங்கிலாபத் திட்டத்தினை Smartbuilder கொண்டுள்ளது.

ஒவ்வொரு காப்பறுதிதாரரும், ஒதுக்கீட்டு வீதத்தை சீராக்கிய மற்றும் அத்தியாவசியக் கட்டணங்கள் கழிக்கப்பட்ட அடிப்படைக் கட்டுப்பணத்தைப் பற்றுவைக்கும் தனியான முதலீட்டுக் கணக்கை கொண்டிருப்பார்.

உங்களது முதலீட்டுக் கணக்கில் பங்கிலாபம் சேர்க்கப்படுவதன் மூலம் உங்களது நிதியப் பெறுமதி தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதனால் உச்சகட்ட ஓய்வூதிய நிதியத்தை நீங்கள் பெற வழிவகுக்கின்றது. குறித்த கட்டணங்கள் உங்களின் முதலீட்டு கணக்கில் இருந்து கழிக்கப்படும். கட்டுப்பணம் செலுத்தும் காலத்திற்குப் பின்னர், மேலதிக ஆயுள் காப்புறுதிக்கான கட்டுப்பணம் மற்றும் விபத்து அனுகூலம் (பெற்றிருப்பின்), காப்புறுதி முதிர்வடையும் வரை முதலீட்டுக் கணக்கிலிருந்து கழிக்கப்படும்.

## உங்களது நிதியம் எவ்வாறு வளர்ச்சியடையும்?

2017 ஆம் ஆண்டில் நீங்கள் 35 வயதுடையவராக இருந்து கட்டுப்பணத்தினை 06 வருடங்களுக்கு செலுத்தும் வகைகளில் மற்றும் காப்புறுதிக் காலம் 20 ஆண்டுகளாக இருப்பின் வருடாந்த அடிப்படை தவணைப் பணம் செலுத்தியிருப்பின்,

முதிர்வின் போதான உங்களின் நிதித்திரட்டு

| நிதியத்தின் விபரங்கள் | அனுமானிக்கப்பட்ட பங்குலாப வீதம் | | |
|---|---|---|---|
| | 4% வருடாந்தம் | 8% வருடாந்தம் | 12% வருடாந்தம் |
| முதிர்வின் போதான திரட்டு | 829,864 | 1,680,810 | 3,275,517 |

*(பெறுமதி இலங்கை ரூபாவில்)*

நீங்கள் 15 ஆண்டுகளுக்கு மாதாந்த வருமானம் பெற திட்டமிட்டு இருப்பின் மாதாந்த வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

| அனுமானிக்கப்பட்ட மாதாந்த வருமானம் | அனுமானிக்கப்பட்ட பங்குலாப வீதம் | | |
|---|---|---|---|
| | 4% வருடாந்தம் | 8% வருடாந்தம் | 12% வருடாந்தம் |
| ஓய்வூதிய வயதில் | 4,610 | 9,338 | 18,197 |
| 5வது வருட ஆரம்பத்தில் | 5,240 | 12,355 | 27,875 |
| 10வது வருட ஆரம்பத்தில் | 6,148 | 17,532 | 47,502 |
| 15வது வருட ஆரம்பத்தில் | 7,214 | 24,878 | 80,948 |

*(பெறுமதி இலங்கை ரூபாவில்)*

அட்டவணையில் காட்டப்பட்ட அனுமானிக்கப்பட்ட பெறுமதிகளானவை 4%, 8% மற்றும் 12% எனும் உத்தேசிக்கப்பட்ட பங்கிலாப அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்டணங்களும் அறவிடப்படும் மற்றும் அனைத்து கட்டுப்பணங்களும் உரிய செலுத்த வேண்டிய திகதியில் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட உத்தேச பங்கிலாப வீதங்கள் உத்தரவாதமளிக்கப்பட்டவையல்ல என்பதுடன், நீங்கள் பெறக்கூடிய உச்சக்கட்ட அல்லது குறைந்தபட்ச எல்லையையும் குறிக்க மாட்டாது.

மேற்கூறிய விளக்கத்திற்கு மேலதிகமாக உங்களது பாதுகாப்பு பலன்கள் பின்வருமாறு இருக்கலாம்.

| திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அனுகூலங்கள் | தொகை |
|---|---|
| மரணத்தின் போது செலுத்தப்படும் தொகை (அடிப்படைக் காப்புறுதித் தொகை + மேலதிக ஆயுள் காப்புறுதி அனுகூலம்) | ரூபா 1,500,000 |
| **கட்டுப்பண பாதுகாப்பு ஆனுகூலம்**<br>முழுமையான இயலாமைக்கு நீங்கள் உள்ளானால் அல்லது மரணம் ஏற்படும் போது எஞ்சியுள்ள கட்டுப்பணங்களை மெற்கொள்ளும் பொறுப்பிலிருந்து நீங்கள் விடுபடுவீர்கள் என்பதுடன், உறுதிப்படுத்தப்பட்ட அனுகூலங்கள் தொடச்சியாக காப்பீட்டு காலப் பகுதியில் பெற வாய்ப்புப் பெறுவீர்கள். | |

அடிப்படை காப்புறுதித் தொகை மற்றும் முதிர்ச்சி அனுகூலத்தை என்பனவற்றைக் கட்டியெழுப்ப அடிப்படைக் கட்டுப்பணம் பயன்படுத்தப்படுகின்றது. மேலதிக அயுள் காப்புறுதி அனுகூலம் மற்றும் கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் உள்ளடங்கலாக வருடாந்த மொத்தமாக 105,091 செலுத்தப்படும்.

## திட்டம் சம்பந்தமான ஏனைய தகவல்கள்

நுழைவு வயது: 19 - 61 (அடுத்த பிறந்த திகதியில்)

முதிர்ச்சி பெறும் அதிகபட்ச வயது: 76 வயது (அடுத்த பிறந்த திகதியில்)

கட்டுப்பணம் செலுத்தும் தவணை கால எல்லை: 04 அல்லது 06 வருடங்கள்

காப்புறுதி தவணைக்காலம்: 10 - 20 வருடங்கள்

**குறிப்பு:**
கட்டுப்பணம் செலுத்தும் காலம் 4 வருடங்களாயின், கட்டுப்பணம் வருடாந்தம் செலுத்துவது அவசியம்.

கட்டுப்பணம் செலுத்தும் காலம் 6 வருடங்களாயின், கட்டுப்பணம் செலுத்துதல் மாதாந்தம், காலாண்டு, அறையாண்டு அல்லது வருடாந்தம் நடைபெற வேண்டும்.

## உரிய கட்டணங்கள்

### ஒதுக்கீட்டு கட்டணம்

| காப்புறுதி ஆண்டு | 1வது காப்புறுதி ஆண்டு | 2வது காப்புறுதி ஆண்டு | 3வது காப்புறுதி ஆண்டு தொடக்கம் |
|---|---|---|---|
| அடிப்படை கட்டுப்பணத்திற்கான ஒதுக்கீட்டு கட்டணம் | 40% | 15% | 0% |
| மீள்நிரப்பல் (Top-up) கட்டுப்பணத்திற்கான ஒதுக்கீட்டுக் கட்டணம் | (ஒவ்வொரு (Top-up) மீள்நிரப்பல் கட்டுப்பணத்தின் மீதும்) 4% | | |

### கையளிப்பிற்கான தண்டப் பணம்

| காப்புறுதி ஆண்டு | 1வது காப்புறுதி ஆண்டு | 2வது காப்புறுதி ஆண்டு | 3வது காப்புறுதி ஆண்டு | 4வது காப்புறுதி ஆண்டு தொடக்கம் |
|---|---|---|---|---|
| கையளிப்பிற்கான தண்டப் பணம் | 100% | | | 100% to 0%* |

* காப்புறுதிக் காலத்தில் முறையே குறைந்து செல்லும்.

### நிர்வாகக் கட்டணம்:

2017 ஆம் ஆண்டில் ரூபா 661.25 ஆக இருப்பதுடன் ஒவ்வொரு வருடம் ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து 15% ஆக அதிகரிக்கின்றது.

### நிதிய முகாமைத்துவக் கட்டணம்

மிகுதி நிதிய முதலீட்டுக் கணக்கு பெறுமதியில் வருடத்திற்கு 0.75% ஆகும்.

### இறப்பு வீத கட்டணம்

அடிப்படை காப்புறுதி தொகை மற்றும் நிறுவனத்தின் திட்ட செலவினங்களுக்கு அமைவானது.

## உங்களின் பொறுப்பு என்ன?

அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள காப்புறுதித் திட்டத்தின் கட்டுப் பணத்தினைச் செலுத்தும் முழுக் காலப்பகுதியிலும் குறித்த நேரத்தில் கட்டுப்பணத்தினை செலுத்த வேண்டும். முதல் 3 வருடங்களுக்குள் நீங்கள் உங்களது கட்டுப்பணத்தினை உரிய தினத்தில் இருந்து 30 நாட்கள் என்ற சலுகைக் காலப்பகுதிக்குள் செலுத்தா விட்டால் காப்புறுதி செயலிழந்து விடுவதுடன், இத்திட்டத்தின் கீழ் உங்களுக்கு எந்தவிதமான அனுகூலங்களும் கிடைக்காது. எவ்வாறாயினும், நிபந்தனைகளுக்கு அமைய காப்புறுதித் திட்டத்தை மீண்டும் செயற்படுத்த உங்களுக்கு தெரிவு உள்ளது.

உங்களது காப்புறுதித் திட்டத்தை 3 வருடமோ அல்லது அதற்கு அதிக காலமோ உரிய காலத்தில் கட்டுப்பணத்தினை செலுத்தி முறையாக அமுலாக்கி வருவதுடன் நீங்கள் கட்டுப்பண கொடுப்பனவை தவறவிட்டிருப்பின் நிறுவனமானது காப்பீட்டு நிர்வாகக் கட்டணம், நிதி முகாமைத்துவக் கட்டணம், அடிப்படை காப்பீட்டு தொகைக்கான இறப்ப வீத கட்டணம், மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட பாதுகாப்பு அனுகூலங்களுக்கான கட்டணம் என்பன உங்களது முதலீட்டு கணக்கிலிருந்து அறவீடு செய்து உங்களுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு அனுகூலங்களை வழங்குகிறது. உங்களின் பொருளாதார நெருக்கடிகளின் போதும் உங்களின் முதலீட்டுக் கணக்கில் தேவையான மீதி இருக்கும் பட்சத்தில் காப்பீட்டு அனுகூலங்களை தொடர்ந்தும் அனுபவிப்பீர்கள். மேற்கூறிய கட்டணங்களையும், கட்டுப்பணத்தினையும் முதலீட்டு கணக்கு மீதியில் இருந்து கழிக்க முடியாத பட்சத்தில் காப்பீட்டு உடனடியாகவே செயலிழந்துவிடும். உங்கள் நிதியத்தின் சீரான வளர்ச்சிக்கு உரிய காலத்தில் கட்டுப்பணத்தினை தவறாது செலுத்துவது அவசியமாகும் என்பதை அறியத் தருகிறோம். பாதுகாப்பு அனுகூலங்களை அனுபவிக்கும் அதேவேளை உங்கள் கனவுகளையும் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள இது உதவும். தேவைப்படும் சந்தர்ப்பத்தில் திட்டத்தை பணமாக மாற்றிக் கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கிறது. எவ்வாறாயினும், இதன்போது திட்டத்தை கையளிப்பிற்கான ஒரு கட்டணம் அறவிடப்படும். பையளிப்பின் பின் காப்புறுதி செயலிழந்து விடும்.

## மேலதிக அனுகூலங்கள்

### திடீர் விபத்து அனுகூலம்

திடீர் விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்பின் போது மேலதிக ஆயுள் காப்பீடு இதன்மூலம் வழங்கப்படுகிறது. மேலும், நீங்கள் திடீர் விபத்தின் காரணமாக முழுமையான இயலாமைக்கு உள்ளானால், உங்களுக்கு இவ் அனுகூலத்தின் மூலம் நிதிசார் பாதுகாப்பு வழங்கப்படும்.

ஆயுள் காப்புறுதி செய்யப்படவுள்ளவர் காப்புறுதி உரிமையாளராக அல்லாத விடத்தில், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அனுகூலங்கள் காப்புறுதி உரிமையாளருக்கே உரித்தாகும். எனினும் காப்பீடுகள் காப்புறுதி செய்யப்படவுள்ள ஒன்றானும்.

முழுமையான விபரங்களுக்கு தயவுசெய்து ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தைப் பார்க்கவும். இவ்வெளியீடானது ஒரு சாராம்சம் மாத்திரமே ஆகும்.

SB - 300000112
V6 - 05/18

# AIA பற்றி

AIA குழுமம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முன்னணி ஆயுள் காப்புறுதி வழங்குநர் ஆகும்.



1919
சீனா

1931
ஹொங்கொங்

1931
சிங்கப்பூர்

1938
தாய்லாந்து

1947
பிலிப்பீன்ஸ்

1948
மலேசியா

1957
புருணே

1972
அவுஸ்திரேலியா

1981
நியூஸீலாந்து

1982
மக்காவு

1984
இந்தோனேசியா

1987
கொரியா

1990
தாய்வான்

2000
வியட்னாம்

2001
இந்தியா

2012
இலங்கை

2013
மியன்மார்*

2015
கம்போடியா

*AIA மியன்மாரிலும் பிரதிநிதித்துவ அலுவலகத்தைக் கொண்டுள்ளது.

**US$1 டிரில்லியனுக்கும்** அதிகமான காப்பீட்டுத் தொகை

ஆசிய வரலாற்றில் **100 ஆண்டுகளுக்கு அண்மித்த** அனுபவம்

**உலகளாவிய 18 சந்தைகள்**

**30 மில்லியனுக்கும்** அதிகமான தனிப்பட்ட காப்புறுதிகள்

**16 மில்லியனுக்கும்** அதிகமான குழுமக் காப்புறுதி அங்கத்தவர்கள்

AIA Insurance Lanka PLC (Co.No.PQ 18) இனால் வெளியிடப்பட்டது. 05/2018

HEALTHIER, LONGER, BETTER LIVES

AIA இன்ஷுவரன்ஸ் லங்கா PLC
(Co.No.PQ 18)
AIA டவர், 92, தர்மபால மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி: 011 2310310
தொலைநகல்: 011 4715892
மின்னஞ்சல்: lk.info@aia.com